ந.க.என்.1/21576/2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
உதகமண்டலம்.
நாள்: 06.11.2017.

பத்திரிக்கை செய்தி

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பொழிகின்றது. வடகிழக்கு பருவமழையின்போது நிலச்சரிவு, மரம் விழுதல், வெள்ள அபாயம் போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதால் இவற்றை த்விர்க்கும் பொருட்டு பேரிடர் காலங்களில் தங்களது வீடு உறுதியாக கட்டப்பட்டுள்ளதா என்பதை அறிந்து குடியிருக்கவேண்டும். பாதிப்பு ஏற்படக் கூடிய பகுதியில் இருந்தால் அருகாமையில் உள்ள நிவாரண மையத்தில் தங்கவேண்டும் நிவாரண மையத்திற்கு செல்லும் வழி குறித்து குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் அறிந்திருக்க வேண்டும். கட்டுமான பணியின்போது வெள்ளத்தால் பாதிக்காத வகையில் தரமான கட்டுமான பொருட்களை கொண்டு வீடு/கட்டிடம் கட்ட வேண்டும் தொலைபேசி மற்றும் உள்ளூர் வானொலியின் வாயிலாக தெரிவிக்கப்படும் பேரிடர் தொடர்பான செய்திகளை தவறாமல் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும். அவசரகால பெட்டியை தேவையான அத்தியாவசிய பொருட்களுடன் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். உலர் வகை உணவுகள், குடிதண்ணீர் மற்றும் தேவையான துணிகளை தயாராக வைத்துக்கொள்வதுடன் கொதிக்க வைத்த தண்ணீரையே பருக வேண்டும்.

பேரிடர் காலத்தில் குழந்தைகள் மற்றும் கருவுற்ற பெண்கள் வெறும் வயிற்றில் இருக்க கூடாது. உணவு பொருட்களை மூடிவைக்க வேண்டும். தேவையான வெம்மை உடைகள், அத்தியாவசிய மருந்துகள் விலை உயர்ந்த பொருட்கள், தனி நபரின் பத்திரங்கள் மற்றும் பலவற்றினை மழைதண்ணீர் புகாத பையில் வைத்து பாதுகாக்க வேண்டும் எனவும் இப்பொருட்களை குடியிருப்பு வீட்டில் உள்ள மேஜை மீதோ, படுக்கை விரிப்பின் மேலோ வைத்து பாதுகாக்க வேண்டும்.

பேரிடர் காலத்தில் மின் சாதனங்களையும், மின் இணைப்பினையும் துண்டித்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒம்/-மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக,
உதகமண்டலம்.